# திருஞானசம்பந்தரும் தியாகராஜரும்

மீரா வில்லவராயர்

சங்க காலந்தொட்டு இன்றுவரை படிப்படியாக வளர்ச்சியுற்ற தமிழிசை ஒவ்வொரு காலகட்டத்திலும் பலவித மாற்றங்களையும் வளர்ச்சியினையும் அடைந்ததைக் காணமுடிகிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் நிலவிவந்த இசைமுறைமை அடுத்த காலகட்ட இசைமுறைமையின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்ததைக் காணலாம். 7 - 9 ஆம் நூற்றாண்டுகளில் தேவாரமுதலிகளால் அருளப் பெற்ற தேவாரங்களே இந்திய இசை வரலாற்றில் முதன்முதலாக நமக்கு கிடைத்துள்ள இராக (பண்) அமைப்புடன் கூடிய இசை வடிவங் களாகும். இப்பண் சுமந்த பாடல்களில் தேவார முதலிகளாகிய சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் கையாண்ட இசையணிகள், இசையமைதி, இயலமைதி பிற்காலத்தில் வாழ்ந்த வாக்கேயகாரர்களின் உருப்படிகளில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளதைக் காணலாம். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என சுந்தரமூர்த்தி நாயனாரால் போற்றிப் பாடப்பெற்ற



Scanned by CamScanner

திருஞானசம்பந்தரின் தேவார திருமுறைகளையும் சங்கீத மும்மூர்த்திகளுள் முதல்வராகக் கருதப்படும் தியாகராஜ சுவாமிகளின் உருப்படிகளையும் ஒப்பிட்டு நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தியாகராஜ சுவாமிகள் இயற்றிய 'இந்நாள்ளவலே' என்னும் தேசிய தோடி இராகத்திலமைந்த கிருதியில் 'சிசுவுக்கு பாசதாகிஞ்சின தர்மாம்பிகே' எனக் குறிப்பிடுவது உமையம்மை திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டிய சம்பவத்தை என்றே கொள்ள வேண்டியுள்ளது. தேவாரமுதலிகள் மூவராலும் பாடப்பெற்ற திருத்தலமாகிய திருவாரூரில் பிறந்த தியாகராஜர் திருவையாற்றில் வளர்ந்தமையினால் திருவையாறு ஆலயத்தில் வாசிக்கப்பட்ட நாதஸ்வர இசை, ஓதுவார்களால் இசைக்கப்பட்ட பண்ணிசை என்பவற்றைக் கேட்டு சிறுவயதிலிருந்தே இசை ஞானத்தை வளர்த்துக்கொண்டார். மேலும் தெலுங்கு மொழியில் தியாகராஜசுவாமிகள் தம் உருப்படிகளை இயற்றியிருப்பினும் சம்பந்தரை தம் உருப்படியில் (இந்நாள்ளவலே) குறிப்பிட்டுள்ளமை தியாகைய்யர் சம்பந்தர்மேல் கொண்ட அபிமானத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அத்தோடு திருஞானசம்பந்தர் அருளிய தேவாரங்களில் காணப்படும் இயலிசையமைதிகள் தியாகராஜர் கிருதிகளிலும் பிரதிபலிப்பதைக் காணலாம்.

சம்பந்தர் பல தலங்களுக்கும் சென்று அத்தலங்கள்மேல் பதிகம் பாடியதுபோல் தியாகராஜசுவாமிகளும் பல தலங்கள்மீது கொத்துக் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். உ-ம் :

திருவையாறு தலத்தின்மீது 12 கிருதிகள்
திருவொற்றியூர் தலத்தின்மீது 05 கிருதிகள்
கோவூர் தலத்தின்மீது 05 கிருதிகள்
ஸ்ரீரங்கம் தலத்தின்மீது 05 கிருதிகள்
லால்குடி தலத்தின் மீது 05 கிருதிகள்



Scanned by CamScanner

பொதுவாக பதினொரு பாடல்களைக் கொண்ட சம்பந்தரது பதிகங்களில் பதினொராம் பாடலில் அவ்வப் பதிகங்களை ஓதுகின்றவர் பெறும் பயனும் ஞானசம்பந்தன் என்னும் வாக்கேயகாரர் முத்திரையும் இடம்பெற்றிருக்கும்.

இவ்வமைப்பு தியாகராஜ சுவாமிகளின் கிருதிகளிலும் இடம்பெறுவதைக் காணலாம். அவரது கிருதிகளின் சரணத்தில் 'தியாகராஜ் என்னும் முத்திரை இடம்பெற்றுள்ளது. பல சரணங்களையுடைய உற்சவ சம்பிரதாயக் கிருதிகள், திவ்யநாமக்கிருதிகளின் இறுதி சரணத்தில் 'தியாகராஜ' என்னும் முத்திரை இடம்பெறுகின்றது.

இசைவரலாற்றில் காரைக்காலம்மையார், ஞானசம்பந்தர் அருளிய பதிகங்களிலேதான் முதன்முதலாக அருளியவர் பெயர் (வாக்கேயகாரர் முத்திரை) இடம்பெறுகிறது. அவரை அடியொற்றியே பிற்காலத்தில் வாழ்ந்த வாக்கேயக்காரர்கள் தம் பெயரையே முத்திரையாக தம் உருப்படிகளில் கையாண்டனர் எனக்கொள்ளலாம். ஒரு பதிகத்திலுள்ள தேவாரங்கள் யாவும் ஒரே இசைமெட்டில் அமைந்திருப்பது போன்றே தியாகராஜர் இயற்றிய அநேகமான உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகள், திவ்யநாம கீர்த்தனைகளின் பல்லவி, சரணங்கள் யாவும் ஒரே இசையமைப்பில் இருப்பதைக் காணலாம்.

சம்பந்தர் தாம் இயற்றிய பதிகத்தினை இசையோடு பாடிய மாந்தர் பல பலன்களைப் பெறுவதாக பதிகத்தின் 11 ஆவது பாடலில் குறிப்பிடுவதுபோன்று தியாகராஜரும் தனது கிருதிகளில் அக்கிருதியைப் பாடுவதனால் ஏற்படும் பயன்பற்றிக் குறிப்பிடுகிறார். பிரஹலாத பக்தி விஜயத்தில்

*"யே காயந்தி ஸதா பக்த்யா*
*யே ச்ருண் வந்தி சசரத்தயா*
*யே படந்தி ஸதா ப்ரீத்யா*
*தேஹாம் ஸர்வாக நாசநம்"*



Scanned by CamScanner

என வரும் இவ்வரிகளின் பொருள் :- இதை (இப்பாடலை) எவர்கள் பக்தியுடன் பாடுகிறார்களோ, சிரத்தையுடன் கேட்கிறார்களோ பிரியத்துடன் படிக்கிறார்களோ அவர்களின் பாவங்கள் அனைத்தும் அகன்றுவிடும் என்பதாகும்.[2]

## இயமகம்

ஓரடியில் முன்வந்த சொல்லோ தொடரோ வேறொரு பொருள்பட மீண்டும் அதே அடியில் மடக்கிவரும் அமைப்பு இயமகம் எனப்படும். இதனை தமிழிசையில் 'மடக்கு' என்பர். சம்பந்தர் நான்கு பதிகங்களை 'பழம் பஞ்சுரம்' என்னும் பண்ணில் இயமக அமைப்பில் அருளியுள்ளார்.

1. உற்றுமை சேர்வது - திருக்கழுமலம்
2. பாயும்மால் விடைமேல் ஒரு - திருஏகம்பம்
3. ஆலநீழல் உகந்து - திரு ஆலவாய்
4. துன்று கொன்றை நம் சடையதே - திருவீழிமிழலை

உதாரணமாக 'உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருள் மெய்யினையே' என்னும் தேவாரத்தில் முதலில் வரும் மெய்யினையே என்னும் சொல் இறைவன் திருமேனியையும் இரண்டாவதாக வரும் மெய்யினையே என்பது இறைவனின் அருள்தன்மையினை உணருகின்ற அருள் உண்மையினையும் குறிக்கும். இவ்வாறான இயமக அமைப்பு தியாகராஜ சுவாமிகளின் கிருதிகளிலும் காணலாம். உ-மாக 'தெலிஸி ராமசந்தர்' என்னும் பூர்ணசந்திரிகா இராகத்தி லமைந்த கிருதியில் 'ராம' என்னும் சொல் பெண் என்னும் பொருளிலும் பரப்பிரம்மம் என்னும் பொருளிலும் வருகின்றது. அதே கிருதியில் 'அஜ' என்னும் பதம் ஆட்டையும் பிரம்மனையும் குறிக்கின்றது. 'அர்க்க' என்னும் பதம் சூரியனையும் எருக்கஞ்செடியையும் குறிக்கின்றது.[3]

இசை உருப்படி அல்லது ஓர் இசை வடிவத்தின் பிற்பகுதி இரட்டித்த காலத்தில் அதாவது மத்திம காலத்தில் அமைந்திருந்தால் அவ்வணி முடுகிசை அணி அல்லது மத்திமகால ஸாஹித்திய அணி எனப்படும். இவ்வமைப்பு முறையை இசையுலகிற்கு அறிமுகப்படுத்தியவர் சம்பந்தர் எனத் துணிந்து கூறலாம். இவர் அருளிய 'இடரினும் தளரினும்' என்னும் காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்த தேவாரத்தின் இறுதி இருவரிகளும் முடுகிசையாகப் பாடப்படுகின்றன.

*இடரினும் தளரினும் எனது உறுநோய்*
*தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்*
*கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை*
*மிடறினில் அடக்கிய வேதியனே.*
*இதுவோ எமை ஆளும்ஆறு ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்*
*அதுவோ வுனதின்னருள் ஆவடுதுறையரனே*

தியாகராஜரும் இவ்வமைப்பைப் பின்பற்றி தர்பார் இராகத்திலமைந்த 'யோசநா கமல லோசந நநுப்ரோவ' என்னும் கிருதியை இயற்றியுள்ளார். இக்கிருதியின் சரணம் முழுவதும் முடுகிசையாகவே அமைந்துள்ளது.

## பொருள்

சம்பந்தருடைய தேவாரங்களில் இசை தொடர்பான பல செய்திகள் வருவது போன்றே தியாகராஜருடைய கிருதிகளில் பல அரிய இசை தொடர்பான செய்திகள் இடம்பெறுகின்றன.

'பண்ணும் பதமேழும் பல ஓசைத்தமிழவையும்' என்னும் சம்பந்தரின் பாடலில் பண்ணும் 7 ஸ்வரங்களும் பல ஓசைத்தமிழாகிய நடைபேதங்களும் தாளங்களும் தாளத்தொலிகளை முழங்கும் இசைக் கருவிகளும்

இடம்பெறுகின்றன. மேலும் இறைவனை 'ஏழிசையோன்' 'பண்ணொடு இசையாள்' என்றும் பாடுகிறார்.

இராமபக்தராகிய தியாகராஜசுவாமிகள் எல்லா தெய்வங்கள் மீதும் பக்திகொண்டவர் என்பதற்கு சான்றாக 'ராம தநுமநிசம்' என்னும் கிருதியில் நடராஜமூர்த்தியின் ஐந்து முகங்களிலிருந்து பிறந்தவை ஏழுஸ்வரங்கள் என்கிறார். நாதத்தையே சரீரமாகக் கொண்டவன் சிவசங்கரன் என்றும் குறிப்பிடுகிறார். சிவனே ஏழு ஸ்வரங்களுக்கும் மூலம் என்னும் கருத்து சம்பந்தர் தேவாரங்களிலும் தியாகராஜர் கிருதிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 'காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி என்னும் தேவாரத்திலும் இசையால்தான் அதுவும் காதலாகி கசிந்து கண்ணீர் மல்கினால்தான் அப்பொருள் ஓதுவார்க்கு நன்மை பயக்கும்' என்னும் பொருள்பட சம்பந்தர் பாடியுள்ளார். இதற்கு ஒத்த கருத்தினை இசைமேதை தியாகராஜசுவாமிகளும் 'சங்கீதஞானமு பக்திவினா சன்மார்க்கமு கலதே மனஸா' என்னும் தன்யாஸி இராகத்திலமைந்த கிருதியில் எவ்வளவு உயர்ந்த இசை என்றாலும் பக்தியில்லையென்றால் அது நன்னெறியில்லை என்னும் பொருள்படப்பாடியுள்ளார்.[4] இவ்வாறாக சம்பந்தர் தேவாரப் பாடல்களில் இடம்பெறும் பல கருத்துக்கள் தியாகராஜசுவாமிகளது கிருதிகளிலும் இடம்பெறுவதைக்காணலாம்.

## இசை

பல தேவாரப்பாடல்களின் மெட்டுக்களை அடியொற்றி தியாகராஜர் பல கிருதிகளை இயற்றியுள்ளதாக பல ஆய்வாளர்கள் செய்முறை ரீதியாக ஆராய்ந்து கூறியுள்ளனர். திருஞானசம்பந்தரின் 'மாதர் மடப்பிடியும்' என்ற யாழ்முரிப்பண்ணில் அமைந்த பதிகம் ஆரம்பமாவது போல் தியாகராஜரின் 'பஜன சேயராதா' என்ற அடாணா இராகக் கிருதி ஆரம்பமாவதாக பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி அவர்கள் கூறுகிறார்.[5] காலஞ்சென்ற இசைமேதை டாக்டர். எஸ். இராமநாதன் அவர்கள் பல கருத்தரங்குகளில் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பாடல்களின் வர்ண மெட்டுக்கள்



Scanned by CamScanner

தியாகராஜருடைய கிருதிகளில் பிரதிபலிப்பதைப் பாடிக்காட்டியுள்ளார். 1978 ஆம் ஆண்டு தமிழிசைச்சங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் (24.12.1978) சம்பந்தரது 'மங்கையர்கரசி" என்னும் புறநீர்மை பண்ணிலமைந்த தேவாரத்தையொட்டி, தியாகராஜரது 'பக்தி பிட்ஷமீயவே' என்னும் கிருதியும் 'நீறுசேர்வதோர்' என்னும் மேகராக குறிஞ்சிப்பண்ணில் அமைந்த தேவாரத்தினையொட்டி 'லாலியூகவே' என்னும் கிருதியும் சம்பந்தர் மாத்திரமே கையாண்ட வியாழக்குறிஞ்சி பண்ணிலமைந்த 'அவ்வினைக் கிவ்வினை' (பிடியதனுருவுமை) என்னும் தேவாரத்தினையொட்டி 'ஸ்ரீகணபதிநீ' என்னும் கிருதியும் தியாகராஜர் இயற்றியதாகக் குறிப்பிடுகிறார்.[6] மேலும் சம்பந்தர் அருளிய 'கல்லூர் பெருமணம்' என்னும் அந்தாளிக் குறிஞ்சிப் பண்ணிலமைந்த தேவாரத்தின் இசையமைதி தியாகராஜரின் "சாந்த முலேக ஸௌக்யமுலேதா" என்னும் சாமா இராகக் கிருதியில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

திருஞானசம்பந்தர் கையாண்ட பண்களில் தியாகராஜர் இயற்றிய கிருதிகள் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| **பண்** | **தியாகராஜ கிருதிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| 1. புறநீர்மை (பூபாளம் இராகச் சாயலுடன் விளங்கும் பௌளி | 202 |
| 2. காந்தாரம், பியந்தைக்காந்தாரம், கொல்லி,கொல்லிக் கௌவாணம் (நவரோசு) | 01 |
| 3. கௌசிகம் (பைரவி) | 04 |



Scanned by CamScanner

| | |
|---|---|
| 4. இந்தளம் (மாயாமாளவகௌளை) | 04 |
| 5. தக்கராகம், தக்கேசி (காம்போதி) | 07 |
| 6. நட்டராகம், சாதாரி (பந்துவராளி) | 11 |
| 7. நட்டபாடை (நாட்டை) | 03 |
| 8. பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்) | 31 |
| 9. காந்தாரபஞ்சமம் (கேதாரகௌளை) | 11 |
| 10. பஞ்சமம் (ஆகிரி) | 04 |
| 11. பழந்தக்கராகம் (சுத்தசாவேரி, ஆரபி) | 03 |
| 12. சீகாமரம் (நாதநாமக்ரியா) | 02 |
| 13. வியாழக்குறிஞ்சி (சௌராட்டிரம்) | 17 |
| 14. மேகராகக்குறிஞ்சி (நீலாம்பரி) | 06 |
| 15. அந்தாளிக்குறிஞ்சி (சாமா) | 03 |
| 16. செவ்வழி (எதுகுலகாம்போதி) | 10 |

ஆகவே சம்பந்தரால் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தங்கள், வண்ண அமைப்புக்கள், யமகம், திருவிராகம், திருவெழுகூற்றிருக்கை, முடுகிசை, இசையமைப்பு என்பன தியாகராஜ சுவாமிகளின் கிருதிகளுக்கு மட்டுமன்றி பிற்கால வாக்கேயகாரர்களின் இசையாக்கங்களிற்கும் முன்னோடியாக இருந்தமை புலனாகிறது. இவ் வகையில் தமிழிசை வரலாற்றில் தமிழிசை வளர்ச்சியில் தேவாரமுதலிகளுள் ஒருவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சிறப்பிடம் பெறுகின்றார்.



Scanned by CamScanner

## அடிக்குறிப்புகள்

1. டி.எஸ். பார்த்தஸாரதி. *ஸ்ரீ தியாகராஜ ஸ்சுவாமி கீர்த்தனைகள்* ப -345.
2. மேலது ப.XXVIII.
3. மேலது. ப-266.
4. P.T.R, கமலைத்தியாகராஜன். *இசைத்தமிழின் உண்மைவரலாறு* ப - 95.
5. க. பசுபதி *'தியாகராஜரும் தமிழும் (கட்)* ஸரிகமபதநி இதழ் ப - 35.
6. எஸ். இராமநாதன், *பண் ஆராய்ச்சி மாநாடு* 26 ஆம் ஆண்டு அறிக்கை பக் 110 - 111
7. இ. அங்கயற்கண்ணி, *தமிழ்க இசையும் ஆய்வும்* ப - 92

## துணை நூற்பட்டியல்


1. அங்கயற்கண்ணி. இ (1999), *திருஞானசம்பந்தரின் தேவாரப்பாடல்களில் இசை*, கலையகம், தஞ்சாவூர்
2. அங்கயற்கண்ணி. இ (2002), *தமிழக இசையும் ஆய்வும்*, கலையகம், தஞ்சாவூர்
3. கமலைத்தியாகராஜன் P.T.R (2001) *இசைவத்தமிழின் உண்மை வரலாறு*, விவேகானந்தா அச்சகம், மதுரை
4. கிரிபிரகாஷ். த. சா, லக்ஷ்மி பொதுவாள் (2001) *ஸ்ரீஸத்குரு தியாகராஜ சுவாமி கீர்த்தனைகள்*, பிரகாஷ் பப்ளிகேஷன்ஸ், மதுரை.
5. தனபாண்டியன் J. M (2001) *இசைத்தமிழ் வரலாறு இரண்டாம் பகுதி*, தமிழ்ப் பல்கலைகழகம், தஞ்சாவூர்
6. பார்த்தஸாரதி. டி.எஸ். (1976) *ஸ்ரீ தியாகராஜஸ்சுவாமி கீர்த்தனைகள்*, ஹிக்கின் பாதம்ஸ் லிமிடெட், சென்னை




Scanned by CamScanner